நாள் 04.06.2024.

அசல் வழக்கு எண் 111/2015

வா சா 2 கெங்காதரன், த/பெ கொம்பையா

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால், சட்டம் பயின்று வருகிறேன். வழக்கு சொத்தின் புல எண் எனக்கு தெரியுமா என்றால், புல எண் 1139/15 ஆகும். அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால், அதன் மொத்த விஸ்தீரணம் 5.20 சென்ட் அதில் எனது அப்பா கிரையம் பெற்றது 2 1/4 சென்ட் இடமாகும். வழக்கு நாங்கள் 5 1/4 செண்டிற்கு போட்டிருக்கிறோமா அல்லது எனது தந்தை வாங்கிய 2 1/4 செண்டிற்கு போட்டிருக்கிறோமா என்றால், 2 1/4 செண்டிற்குதான் வழக்கு போட்டிருக்கிறோம். அந்த இடத்தில்தான் பிரச்சனை. எனது சொந்த ஊர் எது என்றால், மறுகால்குறிச்சி ஆகும். தாவா சொத்து உள்ள இடம் எங்கு இருக்கிறது என்றால், பொத்தைசுத்தி ஊரில் இருக்கிறது. பொத்தைசுத்தி ஊருக்கும் எங்கள் ஊருக்கும் 15 கி.மீ. தொலை இருக்குமா என்றால், 15 ல் இருந்து 18 கி.மீ. தொலைவு இருக்கும். தாவா சொத்து நம்பி வேளாருக்கு பூர்வீக சொத்தா அல்லது கிரைய சொத்தா என்றால் பூர்வீக சொத்து ஆகும். நம்பி வேளாருக்கு பூர்வீக சொத்து என்பதை காட்ட ஏதாவது ஆவணம் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால், இல்லை. எங்கள் கிரைய ஆவணத்தைதான் தாக்கல் செய்திருக்கிறோம். நம்பி வேளாருக்கு தாவா சொத்து பூர்வீக சொத்தா என்பதை தெரிந்துகொள்ள ஏதாவது ஆவணத்தை நாங்கள் பார்த்தோமா என்றால், அப்பா சொல்லுவார்கள் நான் பார்த்தது கிடையாது.

நம்பி வேளாருக்கு பூர்வீக சொத்து என்பதை காட்ட நான் ஆவணமும் தாக்கல் செய்யவில்லை ஆவணத்தையும் பார்க்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளேன். அதனால் நம்பி வேளாருக்கு தாவா சொத்து பூர்வீக சொத்து என என்னால் சொல்லமுடியாது என்று சொன்னால் சரியல்ல. அவர்களுடைய ஆவணம் சரியாக இருந்தது பட்டா எண் 549 ஆகும். நம்பி வேளாருக்கு பூர்வீக சொத்து என்பதை காட்ட எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் நான்கு பக்க எல்கை எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. நான் அப்பா உடன் சின்ன வயதில்தான் தாவா சொத்து இடத்திற்கு சென்று இருக்கிறேன். சொத்தை நாங்கள் அனுபவிக்காததால்தான் சொத்து நான்குபக்க எல்கை எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியில் நம்பி வேளார் வீடு உள்ளதாக சொல்லியுள்ளோம் அந்த வீட்டின் கதவு எண் என்ன என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தோமா என்றால், எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. எனது தந்தை நெடுஞ்சாலைதுறையில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்லும் காலத்திலும் எனது அப்பா அரசு பணியில்தான் இருந்தார் என்றால் சரிதான். அரசு பணியாளர் விதிக்கு உட்பட்டு எனது அப்பா சொத்தை கிரையம் பெறுவதற்கு அனுமதி பெற்றாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நம்பி வேளார் பெயரில் பட்டா மட்டும்தான் உள்ளது வேறு எந்த ஆவணமும் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. நம்பி வேளார்

பெயரில் பட்டா வழங்கியது சரியா தவறா என்ற விவரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். அப்பா கிரையம் பெற்றிருக்கிறார்கள். நாங்களும் நம்பி வேளாரும் உறவினர்கள் கிடையாது என்று சொன்னால் சரிதான். பழக்கம் ஆகும். நம்பி வேளாரின் மகனும் எனது தகப்பனாரும் நண்பர்கள் என்றால், சரிதான். நம்பி வேளாரின் குடும்பத்தினர் அனைவரும் எங்களுக்கு பழக்கம் ஆகும். தாவா சொத்தில் நம்பி வேளார் வீடு கட்டி குடியிருந்து வருவதை காட்டமின் இணைப்பு ரசீதோ அல்லது குடும்ப அட்டையோ வாக்காளர் அடையாள அட்டையோ பெற்று தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் பவுண்டேசன் போட்டிருந்தவாறுதான் இடத்தை வாங்கினோம். பவுண்டேசன் போடுவதற்கு முன்பு நம்பி வேளார் கட்டிட வரைபட அனுமதி பெற்றாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியவில்லை. நான் சொல்லுவதை போன்று நாங்கள் இடத்தை கிரையம் பெறுவதற்கு முன்பே அந்த இடத்தில் பவுண்டேசன் போடப்பட்டிருந்தால் வரைபட அனுமதியை நாங்கள் நம்பி வேளாரிடம் இருந்து பெற்று தாக்கல் செய்திருப்போம் என்றும் அவ்வாறு பவுண்டேசன் இல்லாததால்தான் வரைபட அனுமதி எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பழைய புல எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் பழைய புல எண்ணின் வில்லங்க சான்றிதழோ அல்லது புதிய சான்றிதழோ பெற்று நீதிமன்றத்தில் அதனை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சாதான். கிரயம் பெறுவதற்கு முன்பு நாங்களோ அல்லது எங்கள் தகப்பனாரோ வில்லங்க சான்றிதழ் போட்டு பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். பட்டா வைத்துதான் கிரையம்

பெற்றோம். வில்லங்க சான்று போட்டு பார்த்திருந்தால் தாவா சொத்து நம்பி வேளாருக்கு பாத்தியப்பட்டதா அல்லது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதா என்ற விவரம் எங்களுக்கு தெரிந்து இருக்கக்கூடும் என்றுசொன்னால் அது பற்ற எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்துகொண்டேன். அவர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொல்லுகிறார்கள். பிரதிவாதி பகவதி வேளார் நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பே கிரையம் பெற்றிருக்கிறார் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் எதிர்வழக்குரையுடன் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால், சரியாக தெரிந்து கொள்ளவில்லை. நீதிமன்ற ஆணையர் இடத்தை பார்வையிட்ட விவரம் எனக்குதெரியுமா என்றால், தெரியும் எனது அண்ணன் சென்றிருந்தார். ஆணையரின் அறிக்கையின் விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்துகொள்ளவில்லை. சாட்சியம் அளிப்பதற்கு முன்பாவது அதனை பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்துகொள்ளவில்லை. களக்காடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாக பிராதில் சொல்லியுள்ளோம் அந்த புகார் கொடுத்ததற்கான புகார் மனுவோ ரசீதோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நம்பி வேளாரை எனது தந்தை தினமும் சந்திக்கும் வழக்கம் உண்டு என்றால், தினமும் கிடையாது 10 நாளைக்கு ஒருமுறை சந்திப்பார்கள். தாவா சொத்திற்கும் நம்பி வேளாருக்கும் எந்தவித பாத்த்யிமும் சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்கும்

அவரது முன் சுவான்தாருக்கும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிதான் ஊராட்சிமன்றத்தில் இருந்து உரிய அனுமதி பெற்று வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். வழக்கு போட்ட பிறகு செங்கல் கட்டு கட்டி அவர்கள்தான் குடியிருந்து வருகிறார்கள். வழக்கு தாக்கல் செய்யும்போதுதான் கட்டுமான்ம செய்தார்கள் என்பதை காட்ட புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்குதாக்கல் செய்யும் காலத்தில்தான் பிரதிவாதி கட்டுமானம் கட்டி தாவா சொத்தில் குடியிருந்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் முதலில் கட்ட ஆரம்பித்தார்கள் எனது தந்தை அதனை தடுத்தார்கள். எனது அப்பா களக்காடு காவல்நிலையத்தில் அதற்கு புகார் கொடுத்தால் அவர்கள் நீதிமன்றத்தில் பரிகாரத்தை தேடிக்கொள்ள சொன்னார்கள். புகார் மனுவோ அல்லது புகார் மனு ஏற்பு சான்றிழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை புகார் கொடுித்தாகவும் காவல்நிலையத்தில் காவல்துறையினர் நீதிமன்றத்தை அணுகசொன்னார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் 1 செண்ட் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் ரூ.90 ஆயிரம் முதல் 1 லட்சம் இருக்கும் . தாவா சொத்தின் மதிப்பிற்கும் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்று சொன்னால் அது தவறு. 20.50.2015 ல் வழக்குமூலம் ஏற்பட்டதாக சொல்லுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவிற்கு பகல் வேலையா அல்லது இரவு வேலையா என்றால், பகல் வேலைதான். 20.05.2015 என்று சொல்லும் தேதி திங்கள்

கிழமை வருவதால் எனது அப்பா அன்றையதினம் பணியில் இருந்ததால் நாங்கள் சொல்லுவதை போன்று அவ்வாறு ஒரு வழக்குமூலமே ஏற்படவில்லை என்று சொன்னால் அது தவறு. தாவா சொத்திற்கும் நம்பி வேளாருக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றும் நம்பி வேளாரிடம் கிரையம் பெற்றதாக சொல்லும் எனது தகப்பனாருக்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.